<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

OS. 272/2023

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் நாள் பி.வா.த.சா.2—ன் வாக்குமூலம்

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)—ன் விதிமுறைகளின்படி முதன்மை மாவட்ட நீதிபதி திருமதி. .ஜி.சுபத்திரா தேவி, எம்.எல்., அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **சக்கரபாணி** | வயது | : | 73 |
| தந்தை/கணவர் பெயர் | : | நடேச படையாச்சி | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | கடலூர் | | : | |

**காணொளி மூலம் பதிவு செய்யப்பட்டது.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் நான் தான் பிரதான பதிலுரை தாக்கல் செய்துள்ளேன். எந்த எந்த சொத்து யார் யாருக்கு எவ்வளவு ரூபாய் மதிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது, ரோடு ஓரம் எவ்வளவு கொடுக்கப்பட்டது என்ற விவரத்தினை பார்த்தேன். ரோடு ஓரம் குறிப்பிட்டுள்ள இடங்கள் உள்ளே உள்ள இடங்களை விட மதிப்பு அதிகம்போகும் என்றால் பாகம் பிரிக்கும் போது அப்படியில்லை, இன்றை சூழ்நிலையில் மதிப்பு அதிகமாக உள்ளது. என்னிடம் ரோடு ஓரம் 1 ஏக்கர் 5 சென்ட் உள்ளது என்றால் ஆமாம். குப்புசாமியிடம் 96 சென்ட் மற்றும் 16 சென்ட் உள்ளது. என்னிடம் இன்னொரு 15 சென்ட் ஒன்று உள்ளது என்றால் ஆமாம். 2 ஆம் பிரதிவாதி சிவஞானத்திடம் ரோடு ஓரம் 96 சென்ட் உள்ளது என்றால் அப்பா விலைக்கு கொடுத்தது.

மேற்சொன்ன ரோடு ஓரம் இருக்கும் சொத்துக்கள் நடுவீரப்பட்டிலும் உள்ளது, சிலம்பிநாதன் பேட்டையிலும் உள்ளது. 1977 ல் பாகம் பிரிந்தது. தோராயமாக அவர் அவர்களுக்கு இவ்வளவு சொத்து என்று பிரித்தோம் என்றால் ஆமாம். பாகம் எழுத்து பூர்வமாக எழுதவில்லை என்றால் எழுத்து மூலமாக பிரிக்கவில்லை, அப்போது வாய் மொழியாக தான் பிரித்துக்கொண்டோம். எங்கள் மூவருக்கும் ரோடு ஓரமாக சொத்து உள்ளதால் மதிப்பு அதிகம் என்றால் வாதிக்கும் ரோடு ஓரம் வெள்ளக்கரை கிராமத்தில் புளியூர் போகும் ரோட்டில் 1 ஏக்கர் 20 சென்ட் சொத்து கொடுத்துள்ளோம். எனது வாக்குமூலத்தில் இந்த விவரத்தினை சொல்லியுள்ளேன். அந்த 1 ஏக்கர் 20 சென்ட் குடும்ப சொத்து தான், என் தாத்தா என் அப்பாவிற்கு கொடுத்த சொத்தை வாதிக்கு கொடுத்தோம், அவர் அதனை விற்றுவிட்டார். அதற்கு ஆவணம் உள்ளதா என்றால் பழைய ரெவின்யூ ரெக்கார்டில் ஆதிமூல படையாச்சி பெயரில் இருக்கும். பட்டா தாத்தா ஆதிமூல படையாச்சி பெயரில் உள்ளது. என் அப்பா பெயரில் பட்டா இல்லை. என் அப்பாவிற்கும் சித்தப்பாவிற்கும் வாய் மொழியாக பாகம் பிரிந்தது. என் தாத்தாவிற்கு 3 பிள்ளைகள். ஒவ்வொருவரும் தலா 1 ஏக்கர் 20 சென்ட் பாகம் பிரித்துக்கொண்டனர். அந்த 1 ஏக்கரில் கொலை நடக்கவில்லை, பக்கத்து தோப்பில் தான் கொலை நடந்தது. அந்த சொத்து தற்போது 1 ஏக்கர் 45 லட்சம் போகிறது. அந்த காலத்தில் ஏக்கர் 10 லட்சம் போனது. அந்த சொத்தினை வாதி வேறு ஒருவரிடம் விற்றுவிட்டார். 29.11.2001 ல் ராஜகுமாரனுக்கு விற்றுவிட்டார் என்றால் சரிதான். அந்த பத்திரம் நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அந்த சொத்து வாதிக்கு பாத்தியமான சொத்து என்று விற்றுள்ளார் என்றால் ஆமாம்.

அந்த சொத்து இந்த வாய்மொழி பாகத்தில் வரவே இல்லை என்றால் சரியல்ல. பாகத்தில் வருவதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. அந்த சொத்தில் ஒரு கொலை நடந்ததால் நாங்கள் மூவரும் அந்த சொத்தினை வாங்க முடியாது என்று சொல்லிவிட்டோம் என்றால் சரியல்ல, 500 மீட்டர் தூரத்தில் கொலை நடந்தது. அந்த சொத்தினை என் பெரியப்பா வாங்கினார், அவரிடம் நான் பணம் வாங்கி கொண்டேன் என்றால் இல்லை. ரோடுஓரம் எனக்கு நிறைய சொத்து உள்ளதாலும், வாதி பாகம் கேட்பதாலும், நான் தவறாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. வாதி பாகம் கேட்பதால் வாதிக்கு ரோடு ஓரம் சொத்து கொடுத்ததாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது என் சொத்தினை கொடுத்துவிட்டு மாற்றி கொள்ள முடியுமா என்றால் 40 வருடங்கள் கழித்து எத்தனையோ பத்திரம் மாறிவிட்டது எப்படி வாதிக்கு மாற்றி தர முடியும். பழைய காலத்தில் எங்கள் ஊர் முறையில் வாய் மொழியாக பிரித்து கொள்வது தான் வழக்கம். சிவஞானம் சொத்து விற்றுள்ளார். சிவஞானம் 3 பெண்கள் திருமணத்திற்காக தலா 1 ஏக்கர் நிலத்தினை விற்றார் என்றால் ஆமாம். அதில் ஒரு ஏக்கரை நான் Ex. A5 ல் வாங்கினேன் என்றால் ஆமாம். அதில் வாதியும் 1 ஏக்கர் வாங்கியுள்ளார். 3ஆம் நபருக்கு சொத்து போகக்கூடாது என்பதால் நாங்களே வாங்கி கொண்டோம் என்றால் இன்னொரு ஏக்கரை 3 ஆம் நபருக்கு தான் விற்றுள்ளார், அதை எங்களால் வாங்க முடியவில்லை. சிவஞானம் தனக்கு பாத்தியமான சொத்து என்று சொல்லி தான் விற்றுள்ளார். பாகத்தில் கிடைத்த சொத்து என்று சொல்லவில்லை. எங்களுக்குள் பாகம் பிரியவில்லை என்பதால் எல்லா சொத்துக்களையும் பங்கு தான் பிரிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

எங்கள் மூவருக்கும் ரோடு ஓரம் சொத்து இருப்பதால் தான் நாங்கள் பாகம் பிரிக்க ஆட்சேபனை சொல்கிறோம் என்றால் சரியல்ல. நடுவீரப்பட்டில் எனக்கும் ரோடு ஓரம் 6 சென்ட் நிலமும் மற்றறொரு 18 சென்ட் நிலமும் நிலம் உள்ளது என்றால் ஆமாம். சிவஞானத்திற்கு 2 சென்ட் இல்லை. குப்புசாமிக்கு 16 சென்ட் நிலம் ரோடு ஓரம் உள்ளது. நடுவீரப்பட்டில் சொத்து மனைக்கட்டு இல்லை, பாகம் பிரிக்கும் போது நிலம் தான. நாங்கள் மூவரும் ரோடு ஓரம் சொத்து வைத்துக்கொண்டு மூவரும் ஒன்று சேர்ந்து கொண்டு வாதிக்கு சொத்து தர முடியாது என்று தப்பு கட்சி செய்கிறோம் என்றால் சரியல்ல.